ஓம்

மனோன்மணி பூசை

அகவல்

இது

ஸ்ரீ ஸ்வாமி பாலானந்த ஸரஸ்வதி
அவர்களால் இயற்றப் பெற்றது.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமி தெரு,
ஸ்ரீ K. S. சுப்பிரமணிய பிள்ளை
அவர்களால் பிரசுரிக்கப்பட்டது.

1939.

ஓம்

மனேன்மணி பூசை

அகவல்

இது

ஸ்ரீ ஸ்வாமி பாலானந்த ஸரஸ்வதி
அவர்களால் இயற்றப் பெற்றது.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமி தெரு,
ஸ்ரீ K. S. சுப்பிரமணிய பிள்ளை
அவர்களால் பிரசுரிக்கப்பட்டது.

1939.



ஓம்

மனோன்மணி பூசை அகவல்

அரிஓம் மனோன்மணி அற்புதப் பொருளே
ஆதியே பரையே சோதியே சுடரே
அரிஓம் என்னு மக்ஷரத் தாதி
ஸ்ரீ ஓம் என்னுஞ் சிற்பரத் தாளே
உருவடி வான உத்தமக் கொழுந்தே
அருவடி வான வாதி யனாதி
ஓங்கிரோ மான ஓங்கார ரீங்கிலியே
ஆங்கிரோ மான ஆதி சத்தி
புவனாப் பதியே போற்றி சிவயநம
சிவயநம வென்று சிந்தித்த பேர்க்கு
அபாய மறுக்கு மறுகோ ணத்தி
ஷட்கோ ணத்தி சர்ப்பா ணத்தி

சொர்ப்ப வனத்தி சூக்ஷ்ம ரூபீ
திரிபுர பவ திகழொளி பவ
பரிபுர பவ பவனொளி பவ
சயிலொளி பவ சரவண பவ
அயிலொளி பவ அகார ரீங்கிலியே
பராபரப் பொருளே பளிங்கொளியானே
நிராதர மான நிஷ்கள ரூபி
சௌவுங் கிலியும் யவ்வுமா னவளே
யவ்வும் உவ்வும் சவ்வுமா னவளே
வாசி யென்னும் வளரொளிக் கொழுந்தே
பூசனை புரியும் புவன பதியே
கிரியுங் கிலியுங் சங்வங் யங்குச
ஆர்ப்பனத் துஞ்சி அமிர்த வர்த்தினி
இரியும் ஈரியும் ரீயுமா னவளே
ரீங்காரத் திலிருக்கும் வடுகா வங்யங்
வடுகா யங்வங் ஆபத் தாரண
பஞ்சா க்ஷரத்தின் பழம்பொரு ளாதி
நெஞ்சா க்ஷரத்தி னிறைந்திருப் பவளே
பிரிவினை யில்லாப் பெண்ணுக் கரசே

சிவயநம வென்னுந் தரிசனப் பொருளே
பூவார் குழலே புவனா பதியே
சாற்றும் பொருளே சௌந்தரி யாளே
ஏற்றுமடியார்க் கிருத யத்தில்
எழுதாப் பொருளே அவ்வுயிராளே
அபய சாக்ஷி அமிர்த வர்த்தினீ
செய்வினை தீர்க்குந் திரிகோ ணத்தி
ஐயுங் கிலியுங் ஐம்பத்தோ ரக்ஷரமும்
நய்யுஞ் சௌவுமாய்த் தோன்றிநின் றவளே
பேய னாகிலும் பெற்றருள் பிள்ளையைத்
தாயே காக்க தானுனக் கேபாரம்
யானின் னுடையாழ அருவுரு வாளே
சரணம் சரணம் நமஸ்தே சரணம்
புவன சௌந்தரி போற்றி நமஸ்தே
உருவடி வாவந்து உப தேசங்கள் கொடுத்துந்
திருவடி தந்தருள் சிவசிவா சரணம்.

முற்றிற்று.

மீரானியா
பிரஸ்,
திருநெல்வேலி
ABE.